Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி நிவைகாசி 30 ஆம் நாள் லபர் 1 (12-6-64) வெள்ளிக்கிழமை இதழ் 124

**ஈழநாடு**

சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | [illegible]-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# கூட்டு அரசாங்கம் பதவியேற்றது

## என். எம்.-நிதி; அனில்-தகவல்; சம்லி-வீடமைப்பு மராத்து

## பழைய மந்திரிகள் அனைவரும் உள்ளனர்



பிரதம மந்திரி



புதிய நிதிமந்திரி

கொழும்பு, வியாழன்

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி — லங்கா சமசமாஜக் கட்சி கூட்டு மந்திரி சபை 'ஈழநாடு' நேற்று வெளியிட்ட பிரத்தியேக செய்தியைப் போல இன்று சுபநேரமான பிற்பகல் 1-28 மணிக்கு ராணிமாளிகையில் கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து பதவியேற்றுக்கொண்டது. ராணி மாளிகையின் முன் நண்பகலிலிருந்தே பெருந்தொகையான மக்கள் கூடியிருந்தனர். சுதந்திரக் கட்சியின் நீலக் கொடிகளும் சமசமாஜக் கட்சியின் செங்கொடிகளும் ராணிமாளிகைக்கு முன் பெருமளவில் காட்சியளித்தன. இன்றைய பதவியேற்பு நிகழ்ச்சியுடன் மூன்று மாதகாலமாக நாட்டில் நிலவிவந்த கூட்டரசாங்க வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

### சமசமாஜிகளுக்கு மூன்று மந்திரிப்பதவி

கூட்டரசாங்கத்தில் லங்காசமசமாஜக்கட்சிக்கு மூன்று மந்திரிப்பதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. உதவிமந்திரிப்பதவிகள்பற்றிய விபரம் இன்னும் வெளியாகவில்லை. சுதந்திரக்கட்சி மந்திரிசபையில் 12 அங்கத்தவர்களிருந்தனர். இப்பொழுது 15 அங்கத்தவர்களைக் கொண்ட மந்திரிசபையாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

# மொழிப்பிரச்னை தீர்க்க உறுதி

கொழும்பு, வியாழன்

சிங்களவர்களாலும், தமிழர்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் உத்தியோக மொழிச் சட்டத்தையும், நியாயமான தமிழ் உபயோக மொழிச் சட்டத்தையும் அமுல் நடத்துவதற்கான வகையில் புதிய சட்டங்கள் கொண்டு வரப்படுமென சுதந்கதிரகட்சி-சமசமாஜககட்சிக் கிடையில் கைச்சாத்தாகியுள்ள 14 அம்ச ஒப்பந்தம் உறுதியளிக்கிறது.

கூட்டரசாங்கம் பதவியேற்ற சில மணி நேரத்திற்குள்ளாக இந்த ஒப்பந்தம் பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்டுள்ளது. சிங்களத்தில் மட்டும் வெளியாகிய அந்த ஒப்பந்த விபரத்தில் இடதுசாரிக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் விபரம் வருமாறு:-

**1. ஜனநாயக சோஷலிஸம்**

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா கலாச்சார, அரசியல், பொருளாதார துறைகளில் 1956-ல் அடைந்த வெற்றியை ஸ்திரப்படுத்தவும், சர்வாதிகார பிற்போக்கு சக்திகளை தோற்கடிக்கவும் ஜனநாயக சோஷலிஸத்தை ஏற்படுத்தவும் பாடுபடுதல்.

**2. மொழிப்பிரச்னை**

மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

**3. சமயம்**

நாட்டின் பெரும்பகுதி மக்களினது சமயமான பௌத்த சமயத்துக்கு உரிய ஒரு ஸ்தானத்தை வழங்குவதுடன் மற்ற சமயங்களுக்குள்ள வழிபாட்டுக்கான பூரண சுதந்திரத்தை வழங்குவது. சமய அடிப்படையை கவனிக்காது எவருக்கு வது அநீதி விளையாத முறையில் நடவடிக்கை எடுப்பது.

**4. பார்லிமெண்ட்**

1956-ல் அடைந்த வெற்றியை ஸ்திரப்படுத்தவும், பொது மக்கள் ஆதரவைத் திரட்டவும் அரசாங்க நிர்வாகத்தில் பெரும் மாற்றங்களை செய்வது.

பாராளுமன்றத்தின் நிரந்தர விதிகளை மாற்றி அமைத்து அதன் வேலைகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் சட்ட விதிகளை திருத்துவது.

**5. வங்கிகள்**

தேசிய அபிவிருத்தித் துறையில் வெளிநாட்டு உள்நாட்டு வங்கிகள் இயங்க பயன்தரத்தக்க ஆக்க பூர்வமான நடவடிக்கைளை எடுப்பது.

**6. கம்பனிகள்**

தேசமக்களின் நலன் கருதி உழைக்க அதற்கான வகையில் இங்குள்ள வெளிநாட்டுக் கம்பனிகளை கட்டுப்படுத்துவது.

**7. கட்டாய ஓய்வு**

அரசாங்கத்தின் வேலைகள் திருப்திகரமாக இயங்க ஒத்துழையாதவர்களையும், இடைஞ்சல் விளைவிப்பவர்களையும் தகுதியற்றோரையும் கட்டாயமாக இளைப்பாறச் செய்தல்,

**8. ஸ்தாபனங்கள்**

அரசாங்க காரப்பரேஷன்களுக்கும் இதர ஸ்தாபனங்களுக்கும் தொழிலாளர்களைக் கொண்ட ஆலோசனைச்சபைகளை நிறுவுவது. ஊழல்களையும் விரயத்தையும் கட்டுப்படுத்தி ஸ்தாபனங்கள் லாபக

(6-ம் பக்கம் பார்க்க)

# புதிய மந்திரிசபையும் இலாகாக்களும்

| | |
|---|---|
| பிரதம மந்திரி—வெளிவிவகார மந்திரி | திருமதி சிறிமா பண்டாரநாயகா |
| நிதிமந்திரி | டாக்டர் என். எம். பெரேரா |
| நீதிமந்திரி | ஜி. ஸி டி. ஏ. சில்வா |
| உணவு, விவசாயம், மீன்பிடி | பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா |
| உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம், விநியோகம் | டி. பி இலங்கரத்தின |
| சமூக, கலாசாரம் | டி. எஸ். குணசேகரா |
| மராமத்து, வீடமைப்பு | சம்லி குணவர்த்தன |
| தபால், தந்தி மந்திரி | மகாநாம சமரவீரா |
| ஸ்தலஸ்தாபன உள்விவகார மந்திரி | ஏ. பி. ஜயசூரியா |
| சுகாதார மந்திரி | பதியுதீன் மாமூத் |
| குடிசைக் கைத்தொழில் கிராமாபிவிருத்தி | மைத்திரிபால சேனநாயகா |
| காணி அபிவிருத்தி நீர்பாசனம் | சி. பி. டி. சில்வா |
| தொழில் மந்திரி | எம். பி. டி. இஸட். சிறிவர்த்தன |
| தகவல் மந்திரி | அனில் முனசிங்கா |
| கல்வி மந்திரி | பி. பி. ஜி. கலுகல்ல |

## காங்கிரஸில் சேர்ந்தார் மேத்தா

புதுடில்லி, ஜூன் 11

திரு. அசோக்மேத்தாவும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மற்றும் 3ப பேரும் காங்கிரஸில் சேர்ந்து விட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

## 23 விமானங்கள் நேரு அஸ்தியை தூவும்

புதுடில்லி, ஜூன் 11

காலஞ் சென்ற நேருஜியின் அஸ்தி நாளை 23 இடங்களில் 23 விமானங்களில் இருந்து வயல்களில் தூவப்படும். இந்திராகாந்தி ஒரு விமானத்திலும், ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் மற்றோர் விமானத்திலும், இருந்து இந்தச்சடங்கை நடத்தி வைப்பார்கள். கன்னியாகுமரியிலும் அஸ்திதூவப்படும், தமது தந்தையின் மரணத்தையிட்டு தமக்கு உலகம் முழுதுமிருந்து கிடைத்த பல் லாயிரக்கணக்கான அனுதாப பரிவுச் செய்திகளுக்கு ஸ்ரீமதி காந்தி நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

**மணிவாக்கு**

நீதியான நல்வாழ்வை நாடி இடைவிடாது செய்யும் முயற்சியே முதன்மையான பலனை அளிக்கும்.

— புத்தர்

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி ௴ 30 ௳ (12-6-64)

## கூட்டு அரசாங்கம்

நடக்கும் என்றனர் சிலர். நடக்காதென்றனர் மற்றும் சிலர். நடக்கும் என்பதும் நடக்காதென்பதும் நடந்தேவிட்டது. லங்கா சமசமாஜக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டுவிட்டது. திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில்சுதந்திரக்கட்சி—சமசமாஜக் கட்சி கூட்டுமந்திரிசபை சுபவேரத்தில் பதவியும் ஏற்றுவிட்டது.

கூட்டுஅரசாங்கத்தில் டாக்டர் என். எம். பெரேரா நிதிமந்திரியாகப் பதவியேற்றுள்ளார். திரு பெரேரா முப்பதுவருடஅரசியல் அனுபவமுள்ளவர், புரட்சிக் கருத்தையுடையவராலும் பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் அனுபவம் பெற்றவர். பொருளாதாரத்தில் பாண்டித்தியமுடையவர். நிதிமந்திரி பதவி வகிக்க முற்றிலும் தகுதியுடையவர். ஆனால் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியை டாக்டர் பெரேரா உடனடியாக செம்மையாக்கிவிடுவாரா? அவர் என்ன மந்திரவாதியா?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் நான்குபேர் வகித்த நிதிமந்திரிப்பதவி இப்பொழுது லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் டாக்டர் என். எம். பெரேராவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து, வாழ்க்கைச் செலவு விஷம்போல் உயர்ந்து, பொருளாதார நெருக்கடியான கட்டத்திலுள்ள இச்சமயத்தில் முக்கிய நிதிமந்திரிப்பதவியை ஏற்றுள்ள டாக்டர் பெரேராவின் நிலைமை பொறாமைப்படத் தக்கதல்ல. அவருக்குப் பெரும் பொறுப்புகளுண்டு. இடதுசாரி இயக்கங்களினதும் தொழிற்சங்கங்களினதும் பலத்த எதிர்ப்புக்கிடையில் டாக்டர் பெரேரா மந்திரிப்பதவியை யேற்றுள்ளார். இதேசமயம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் வெளியிலும் தோன்றியுள்ள எதிர்ப்புக்களையும் கண்டனங்களையும் சமாளித்து லங்கா சகசமாஜக் கட்சியுடன் பிரதமர் கூட்டரசாங்கம் அமைத்திருக்கிறார்.

கூட்டரசாங்கம் இன்னும் பல பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். இடதுசாரித் தலைவரான டாக்டர் பெரேரா இடதுசாரிகளின் எதிர்ப்பையும் சமாளிக்க வேண்டியுள்ளது. பிரதமர் எந்த நோக்கத்துடன் கூட்டரசாங்கத்தை அமைத்துள்ள போதிலும் நாட்டின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு அமைத்துள்ளதாகக் கருதிக் கூட்டரசாங்கம் ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்வதற்கு ஆதரவளிக்க வேண்டியதுதான் இதுவரை எதிர்த்தவர்களினது கடமையாகும்.

தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில் டாக்டர் என். எம். பெரேராமீது அவர்களுக்கு ஓரளவு நம்பிக்கை இருந்துவந்திருக்கிறது. மொழி, பிரஜாவுரிமை, ஆகியவைகளில் அவர் இதுவரை கடைப்பிடித்துவந்த கொள்கையையே இனியும் கடைப்பிடித்துவருவாரென்றே எதிர்பார்க்கலாம். என்றாலும் மந்திரிசபைக்குள்ளும் வெளியேயும் பெரும் பிரச்னைகளை எதிர்நோக்கவேண்டியுள்ள நிலையில் டாக்டர் என். எம். பெரேரா பதவியேற்றுள்ளார். உடனடியாக அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கமுடியாது. அவரது திறமையும், அரசியல் விவேகமும் நாட்டுக்குப் பயன்படவேண்டுமென்பதும் அவர் மூலமாவது சிறுபான்மையினர் பிரச்னைகள் குறைந்து நாட்டில் மீண்டும் ஐக்கியம் உருவாகவேண்டுமென்பதும் தமிழ் பேசும்மக்களின் வேணவா.

கூட்டரசாங்கம் அமைப்பதில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும், டாக்டர் என். எம். பெரேராவும் காட்டிய துணிச்சலை நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும் காட்டுவார்களென்று எதிர்பார்ப்போம்.

# "சிரமதானம் மூலம் மகாவலி கங்கையையும் திருப்பலாம்"

## முரசுமோட்டை சிரமதான முகாமில் கருத்து

கிளிநொச்சி, வியாழன்

"இலங்கையில் மகாவலி கங்கையைக்கூட வடக்குப்பக்கமாக சிரமதானத்தின்மூலம் திருப்பமுடியும். இதற்கு இலங்கை மக்கள் அனைவரும் ஒரே குடும்பமாக ஐக்கியமாக வேண்டும். மகாவலி கங்கையைத் திருப்பமுடியாது என ஆச்சரியப்படுவதற்கில்லை. "இதோ உலகின் 8-வது அதிசயம்" என்று கூறி திரு. குருஷ்சேவ் அஸ்வான் அணைக்கட்டுத் திட்டத்தை ஆரம்பித்து நைல் நதியை சகாரா பாலைவனத்துக்குத் திருப்பிவிட்டிருக்கிறார்".

என்று அகில இலங்கைக் காந்திய சேவாசங்கச் செயலாளர் திரு. சோ. க. தம்பிப்பிள்ளை முரசுமோட்டைச் சிரமதான முகாம் கருத்தரங்கிற் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு தம்பிப்பிள்ளை மேலும் குறிப்பிட்டதாவது:—

"இனிமேல் சகாரா பாலைவனத்தை பூமிசாத்திரப் படங்களில் காண்பது முடியாது. சகாசா பாலைவனம் சகாரா சோலைவனமாகிறது. இந்த அரிய சாதனை மனித சக்தியினாலேயே நடந்தது. ஆகையால் இலங்கையில் மக்கள் சக்தி திரளுமானால் மகாவலிகங்கை வடபகுதிக்கு வரமுடியும்.

இலங்கையில் எதிர்காலத்தில் வேண்டிய அபிவிருத்தி வேலைகளை சிரமதானத்தின் மூலமே செய்துகொள்ளவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டிலுள்ள கிராமமுன்னேற்றச்சங்கங்கள் சரியாக இயக்கப்படவில்லை. கேவலம் அரசாங்க நன்கொடைகளை மாத்திரம் எதிர்பார்த்துக் கிடைத்தவற்றை விரயம்செய்துவிட்டு வருடாந்தவிழாவுடன் நின்றுவிடுகின்றன. இதற்குக் காரணம் கிராமாபிவிருத்தி இலாகாவின் குறைபாடுகளேயாகும். ஆகையால் மக்கள் அனைவரும் திரண்டு கிராமமுன்னேற்றச்சங்கங்களுக்கு பின்னர் அமைப்புக் கொடுத்து அவற்றை உபயோகப்படுத்தவேண்டும். கிராம அபிவிருத்திச்சங்கங்கம் பூரண சிரமதான இயக்கமாக மாறவேண்டும்".

திரு. மு. சிவலிங்கம் பேசியதாவது:—

"அந்தக்காலத்தில் ஆலவாய் சோமசுந்தரப் பெருமான் வைகைக்கரையை அடைக்க ஒரு சிரமதானியாக வந்தார். பிட்டுக்காக மண்சுமந்தார். அந்தப் பெருமைமிக்க பரம்பரையில் திருநாவுக்கரசு சுவாமிகள் தோன்றி உழவாரப்பண்மூலம் சிரமதானியானார். அந்தப்பாரதபண்பாட்டில் காந்தியடிகளும் விநோபா அடிகளும் தோன்றி சிரமதானிகளானார்கள். மக்கள் இனத்தையே சிரமதானிகளாகுமாறு அறைகூவி அழைத்தார்கள். அந்த அறைகூவல் இலங்கையிலும் கேட்டது. சிரமதான இயக்கம் பரந்து வளர்ந்துவருகின்றது. நமது சிறு கிராமமாகிய முரசுமோட்டையும் சிரமதான இயக்கத்தில் சேர்ந்துவிட்டது. இந்த இயக்கம் வளர்ந்து உரம்பெற வேண்டும்,

திரு. சு. சோமசுந்தரம் கூறியதாவது:—

"பாரதநாட்டில் இருந்துதான் உலகுக்கு நல்ல செய்தி கிடைப்பது வழக்கமாகிவிட்டது. பெரிய மகான்களும் தீர்க்கதரிசிகளும் தோன்றிய பாரதநாட்டில் இருந்து சிரமதானசெய்தி எங்களுக்குக் கிடைத்தது. பாரத பாரம்பரியம் எல்லோரையும் வாழவைக்கும் சர்வோதய பரம்பரையைத் தோற்றுவித்து உலகுக்கு வழிகாட்டியுள்ளது. இந்நாட்டிலுள்ள நாம் அனைவரும் சர்வோதய பரம்பரையினராவோம்".

திரு. எல். மயில்வாகனம், திரு. சி. க. வேலாயுதபிள்ளை ஆகியோரும் பேசினார்கள். தலைமைதாங்கிய திரு. க. திருஞானசம்பந்தர் சிரமதான இயக்கத்தில் வந்து பங்குபற்றிய தென் இலங்கை, வட இலங்கை சிரமதானிகள் அனைவருக்கும் நன்றி கூறினர்.

# "தானங்களில்சிறந்தது இரத்ததானம்"

## கோப்பாய் சுகதா வார விழாவில் டாக்டர் பேச்சு

நல்லூர், வியாழன்

"சிங்கள மக்களிற் பெரும்பாலோர் இரத்ததானம் செய்ய முன்வருகின்றனர். அவர்களின் இரத்தம் எமக்கு ஆபத்தான சில வேளைகளில் பெரிதும் உபயோகப்படுகின்றது தமிழ் மக்களும் இரத்ததானம் செய்வதில் முன்மாதிரி காட்டினால் இரத்தவங்கியில் போதிய அளவு இரத்தம் இருந்து ஆபத்தான அனைவருக்கும் பயன்படும்" என்று பருத்தித்துறை வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. வி. ஜீவநாயகம் கோப்பாயில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மக்கள் சுகாதார வார விழாவையொட்டி கோப்பாய் பகுதியினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்தப் பொதுக்கூட்டம் மக்களை இரத்ததானம் செய்யும்படி தூண்டுவதற்காக கூட்டப்பட்டது.

இக் கூட்டத்தில் டாக்டர் ஜீவநாயகம் பேசுகையில் மேலும் கூறியதாவது:

இரத்ததானம் செய்வது மற்றைய தானங்களைவிட மிகப்பெரிய சமயத்தொண்டு ஆகும். இப்பகுதி மக்கள் மாத்திரமன்றி வடமராட்சிப் பகுதியில் உள்ளவர்களும் பங்குபற்றவேண்டும்.

சன்னதிகோவிலில் அன்னதானம் செய்வதைவிட இரத்ததானம் செய்வது மிகச்சிறந்த சேவை என்பது எனது கருத்து. அப்பியாசப்படாத தசைநார்கள் எப்படி தேய்வு அடையுமோ அதுபோன்று புதுப்பிக்கப்படாத இரத்தம் சக்தி குறையக்கூடும்.

சிங்களப் பகுதியில் பெருந்தொகையான மக்கள் இரத்ததானம் செய்கின்றனர். சில சமயங்களில் அதுதான் எமக்கு உதவுகின்றது.

கோப்பாய் வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. இ. ஏ. யோசப் பேசுகையில், ஆசிரிய கலாசாலை மாணவிகள் இரத்ததானம் செய்துள்ளதைப் பின்பற்றியாவது ஏனையவர்களும் இரத்ததானம்செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**சுகாதார வாழ்க்கை**

"மாணவர்கள சுகாதார வாழ்க்கையில் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகள் ஆரம்பகாலத்திலிருந்தே மேற்கொள்ளப்படவேண்டும். கல்வி இலாகாவும் சுகாதார இலாகாவும் சுகாதார உத்தியோகத்தர்களை பாடசாலைகள் தோறும் அடிக்கடி அனுப்பிவைத்து மாணவர்களைப் பரிசீலனை செய்தல் அவசியமாகும்" என்று திரு. அ. வைத்திலிங்கம் நேற்றுக்காலை நடைபெற்ற கோப்பாய் சுகாதார விழாவில் பேசுகையில் கூறினார்.

விழாவின் மூன்றும் நாள் நிகழ்ச்சிகளை வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தொடக்கிவைத்தார். அவர் தமது தொடக்கவுரையில் சுகாதாரக் கல்வி போதனையுடன் மட்டும் நின்றுவிடாமல் சுகாதாரப் பொருட்காட்சிகளையும் நடத்திவரவேண்டும். பொருட்காட்சிகள் மூலம் மாணவர் மனத்தில் தெளிவான கருத்தை ஏற்படுத்த முடியும்' என்று சொன்னார்.

திரு. அ. வைத்திலிங்கம் தமது உரையில், 'கல்வி இலாகா சுகாதார உத்தியோகத்தர்களை அடிக்கடி பாடசாலைகளுக்கு அனுப்பி பிள்ளைகளின் உடல்நிலையைப் பற்றி அவதானிக்கவேண்டும். அவர்களுக்குத் தகுந்த வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுக்க இது உதவியாக இருக்கும்' என்று சொன்னார்.

# மட்டக்களப்பில் நடைபெறும் மக்கள் சுகாதார வார விழா

மட்டக்களப்பு, புதன்

நீண்டகால இடைவேளைக்குப் பின்பு இம்முறை மட்டக்களப்பு, பிரமாண்டமானவகையில் சுகாதாரவாரத்தைக் கொண்டாடுகிறது. சுகாதார அதிபர் டாக்டர் எஸ். விவேகானந்தராசா, நகரசபைத் தலைவர் திரு. ஜே. எப். திஸவீரசிங்கம், திரு. பி. சிவராமலிங்கம் ஆகியோரைக்கொண்ட கமிட்டி பல ஒழுங்குகளையும் செய்துள்ளது.

வியாழக்கிழமை சுகாதார வாரத்தையொட்டி பாடசாலை மாணவ மாணவிகளுக்கான பேச்சுப் போட்டி மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரியில் நடைபெறும். 12-ம் திகதி வெள்ளிக்கிழமை சுகாதார வாரப் பொருட்காட்சியை மட்டக்களப்பு அரசடிப் பாடசாலை மண்டபத்தில் அரசாங்க அதிபர் திரு. வி. ஹுட்கின்ஸ் திறந்துவைப்பார். இப்பொருட்காட்சி தொடர்ந்து 14-ம் திகதிவரை நடைபெறும். 12-ம் திகதி வெள்ளிக்கிழமை மட்டக்களப்பின் பல்வேறு பாடசாலை மாணவ மாணவிகளைக் கொண்ட பிரமாண்டமான ஊர்வலமொன்று நகர வீதிகளினூடாக நடாத்தப்படும். சனிக்கிழமை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் மாபெரும் சுகாதார விழாவொன்று நடைபெறும். இவ்விழாவில் சுகாதாரம் சம்பந்தமான நாடகங்கள், நடனங்கள், வில்லுப் பாட்டு, இசை நிகழ்ச்சி, சொற்பொழிவு ஆகியன நடைபெறும். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் இவ்விழாவில் வழங்கப்படும்.

---

### திருவிழா

வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்பாள் கோவிலில் திரு. வை. நல்லையா மாலை 7 மணிக்கு சமயச்சொற்பொழிவாற்றுவார்.

∴ ∴ ∴

ஸ்ரீ வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் மாலை 6-30மணியளவில், வைத்திய சிரோன்மணி டாக்டர் க. குருசாமி தலைமையில் வித்துவான் பொன். முத்துக்குமாரன் பெரியபுராண விரிவுரை நிகழ்த்துவார்.

---

அச்சுவேலி திரேசா பாடசாலை மாணவிகளின் சங்கீத பிரதம சிகிச்சை அப்பியாசம் பலரின் பாராட்டுதலைப் பெற்றது.

# 'மக்கள்வங்கியில் நல்லுறவு'

கொழும்பு, வியாழன்

'நிர்வாகத்தர்களும் தொழிலாளர்களும் இணைந்துசெயலாற்றுவதில் மக்கள்வங்கி மற்ற தொழிற்சங்கங்களுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது' என மக்கள் வங்கித் தலைவர் திரு. வின்சன்ட் சுபசிங்கா இலங்கை வங்கி ஊழியர் சங்க கிளையொன்றை கொழும்பு யூனியன்பிளேஸிலுள்ள மக்கள் வங்கியில் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தலைவர் திரு. ஏனஸ்ட் டி மெல் பேசுகையில் வங்கி ஊழியர் சங்க சரித்திரத்தில் முகாமையாளரும் இணைந்து செயலாற்றுவது இதுவே முதற்தடவையெனத் தாம் கருதுவதாகக் கூறினர்.

---

# திருக்கேதீச்சர ஆலய திருப்பணி

யாழ்ப்பாணம், வெள்ளி

திருக்கேதீச்சர சுவாமி கோவில் அம்பாள்கோவில் திருப்பணிகள் செய்வதற்கு மலேசிய சைவ அன்பர்கள் உதவியளித்துள்ளார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

சுவாமிகோவில் திருப்பணிக்கு இரண்டு லட்சம் ரூபா தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் இதற்கு இலங்கையிலுள்ள சைவமக்கள் உதவவேண்டுமென்றும் திருப்பணிச்சபையினர் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இத் திருப்பணிக்கு வேண்டிய நிதியைத் திரட்டுவதற்கான வழிவகைகளை ஆலோசிப்பதற்கு வலிகாமம் மேற்கு சைவமக்களின் கூட்டமொன்று நாளை மாலை 6 மணிக்கு சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

வண்ணை முத்தமிழ்மணி சி. எஸ்.எஸ். மணிபாகவதர் 'மங்கையர்க்கரசியார்' என்னும் பொருள் பற்றி சங்கீதகதாப்பிரசங்கம் செய்யவிருக்கிறார்.

# அமெரிக்க போர்விமானங்கள் லாவோஸ்மீது தொடர்ந்து பறக்கும்

## ஜெட்போர் விமானங்கள் தேவையென்கிறர் தளபதி லீ

வியன்டைன், ஜூன் 11

லாவோஸ்மீது அமெரிக்க போர் விமானங்கள் பறப்பதை நிறுத்த வேண்டுமென்று லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவர்ணபூமா அறிவித்தல் விடுத்த சிலமணி நேரத்துக்குள் அமெரிக்க போர் விமானங்கள் லாவோஸ்மீது பறப்பதை நிறுத்திக் கொண்டன.

ஆனல் லாவோஸ் பிரதமருடன் வியன்டைனிலுள்ள அமெரிக்கத்தூதர் மூலம் அமெரிக்கா ஆலோசனை நடத்திய பின் அமெரிக்க உளவுவிமானங்கள் தொடர்ந்துலாவோஸ் மீது பறக்குமென்றும் அவற்றுக்குத் துணையாக ஆயுதந் தாங்கிய அமெரிக்க போர் விமானங்கள் செல்லுமென்றும் வாஷிங்டனில் அமெரிக்க ராஜாங்க காரியாலய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

லாவோஸ்மீது அமெரிக்க விமானங்கள் பறக்கக் கூடாது என்று லாவோஸ் பிரதமர் பிறப்பித்த தடையுத்தரவு இதுவரை ராஜாங்க காரியாலயத்துக்கு உத்தியோகபூர்வமாக வந்து சேரவில்லையென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

### வலதுசாரித் தலைவர் ஆதரவு

லாவோஸ்மீது அமெரிக்க வேவுவிமானங்கள் பறப்பதை பிரதமர் சுவன்னபூமா தடுக்க முடியாதென்றும் லாவோஸ் அரசாங்கத்தைச் சேர்ந்த மற்றவர்கள் அதை வரவேற்கிருர்களென்றும் லாவோஸ் உதவிப் பிரதமர் வலதுசாரித் தலைவர் பூமிதொசாவான் தெரிவித்துள்ளார்.

### நடுநிலைமை தளபதி கோரிக்கை

ஜார்ஸ சமவெளியிலுள்ள மௌன்ட்கௌங்படை நிலையத்திலிருந்து இரண்டாவது முறையாகவும் லாவோஸ் நடுநிலைமைப்படைகள் வெளியேறிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. நடுநிலைமைப் படை நிலைகளை இடதுசாரி பதட் லாவோப்படைகள் தொடர்ந்து தாக்கிவருவதாத நடுநிலைமைப்படைத் தளபதி தெரிவித்துள்ளார். இடதுசாரிப்படைகளின் கடுந்தாக்குதலை எதிர்த்துச் சமாளிப்பதற்கு மேலும் அதிக அமெரிக்க குண்டுவீச்சு விமானங்கள் தேவையென்று ஜெனரல் கொங்லீ கேட்டுள்ளார்.

# ஜெர்மனி மகாநாட்டில் பம்பாயில் இருந்தபடி கலந்துகொள்ளலாம்

## விஞ்ஞானத்தின் சாதனை

ஹாம்பர்க் (டாட்) ஜூன் 11

வருங்காலத்தில் நீண்ட தூரம் பிரயாணம் செய்து மகாநாடுகளில் கலந்துகொள்வதற்கு அவசியமே இராது. விஞ்ஞானிகள் அவரவர்கள் இருக்குமிடங்களிலேயே "ரேடியோ டெலிபோனி" சாதனத்தின் மூலம் அயல்நாடுகளில் நடைபெறும் மகாநாடுகளில் கலந்து கொள்ளலாம். ஜெர்மன் டாக்டர்களும் இந்திய டாக்டர்களும் அவரவர்கள் நாட்டில் இருந்தவண்ணமே "ரேடியோ டெலிபோனி" சாதனத்தின்மூலம் புற்றுநோய் சிகிச்சை குறித்து விவாதித்திருக்கிருர்கள்.

மேற்கு ஜெர்மனியில் பிலேபெல்ட் என்ற இடம் வைத்திய ஆராய்ச்சிக்குப் பெயர் பெற்றது. அங்குள்ள ஆஸ்டா ஓர்க்ஸ் ஸ்தாபனமே இந்த விவாதத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்தியாவில் வேறுவித புற்றுநோய்கள் இருந்து வந்தபோதிலும் மத்திய ஐரோப்பாவில் இருந்துவரும் புற்றுநோய் சிகிச்சை முறைகளை இந்தியாவில் வெற்றிகரமாக கையாள முடியும் என்பதை இருநாட்டின் விஞ்ஞானிகளும் ஒப்புக் கொண்டனர். புற்றுநோய் சிகிச்சைமுறைகள் என்ன எச்சரிக்கைகளைக் கவனிக்க வேண்டும் முதலிய விஷயங்களை பற்றியெல்லாம் இவர்கள் விவாதித்தாகள்.

புற்றுநோய் சிகிச்சைக்காக கண்டுபிடிக்கப்பட்டுள்ள சில ரசாயாப் பொருள்கள் பாதிக்கப்பட இடங்களில் வேலை செய்வதுடன் மட்டுமல்லாமல் நன்ருக இருக்கும் திசுக்களையும் ரத்த உற்பத்தி உறுப்புகளைப்பாதித்துவிடுகின்றது என்பது இந்த விவாதத்தின்போது தெரியவந்தது. எவ்வளவோ மருந்துகள் இருந்தபோதிலும் அவைகளைக் கொண்டு சிலரக புற்றுநோய்களை மட்டுமே வெற்றிகரமாக்க் குணப்படுத்த முடிகிறது. இந்த சிகிச்சைகளிலும் சில தவிர்க்க முடியாத கெடுதிகள் ஏற்படவே செய்கிறது. இந்த கெடுதல்களைத் தவிர்க்க ஒரு புதுவழியை மேற்குஜெர்மன் டாக்டர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இதன்படி நன்ருக இருக்கும் உடலுறுப்புகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது.

விஞ்ஞான அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ள இந்த "ரேடியோ டெலியோனி" உரையாடல்கள் மிகவும் ஏற்றதாக உள்ளன. புற்றுநோயை ஒழித்துக் கட்டுவதில் மேற்குஜெர்மனி மிகவும் முன்னணியிலுள்ளது. இந்நாட்டின் அனுபவம் மூலம் பிறநாடுகளும் தக்க பயனை அடையலாம்.

---

## தாக்குதலை தடுக்கவும்!

### மக்காரியஸ் கோரிக்கை

நிக்கோஸியா ஜூன் 11

சைப்பிரஸ்மீது துருக்கி தாக்குதல் நடத்தும் திட்டம் கொண்டுள்ளதால் தாக்குதலை தடுத்து நிறுத்த உதவுமாறு கோரி ஐ. நா. அங்கத்துவ நாடுகளுக்கு சைப்ரஸ் அதிபர் ஆர்ச்பிஷப் மக்காரியஸ் தந்தி மூலம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சைப்ரஸ்மீது துருக்கி தாக்குதல் நடத்தாமல் தடுத்துவிடுமாறு ஆர்ச் பிஷப் மக்காரியஸ் கேட்டுள்ளார்.

சைப்ரஸ்மீது தாக்குதல் நடத்தப்போவதாக துருக்கி பல தடவைகளிலும் வெளிப்படையாக அறிவித்திருப்பதுடன் தாக்குதலுக்கு ஆயத்தங்கள் செய்திருந்ததாவும் சைப்ரஸ் அதிபர் தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளார்,

## வீதி ஓரத்தில் இரத்த சேமிப்பு

மூனிச்(டாட்) ஜூன் 11

சாலைகளில் ஏற்படும் விபத்துகளுக்கு உள்ளாகுபவர்களுக்கு இரத்தம் செலுத்தி உடனடியாகச் சிகிச்சை அளிப்பதற்காக ஜெர்மன் மோட்டார் வண்டிச் சொந்தக்காரர்கள் சங்கம் இரத்த தானம் செய்யும்படி தன் அங்கத்தினர்களை கேட்டுக் கொண்டிருக்கிறது. நெடுஞ்சாலைகளில் இந்த இரத்த சேமிப்பு நிலையங்களை அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இரத்தப் பிளாஸ்மாவை எந்த ரகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பயன்படுத்தலாம். இரத்தத்தை உடலில் ஏற்றுவதற்கான சாதனங்களும் அதற்கான சிப்பந்திகளும் இந்த நிலையங்களில் இருப்பர். அக்கம்பக்கத்திலுள்ள டாக்டர்கள் இதற்கான பயிற்சிகளை அளிப்பர். இதுவரை 30 லட்சம் 'கேஸ்'களில் இதன்மூலம் முதலுதவி செய்யபபட்டுள்ளது.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

### வாலிபரை வதைத்தனர்

ஆடு மேய்க்கும் வாலிபரின் கைகளைக் கட்டி அவற்றின் மீது துணியைச் சுற்றி மண்ணெண்ணையை ஊற்றி தீ வைத்தனராம். இக் கோர சம்பவம் சென்னைக் கருகேயுள்ள பட்டாபிராமில் நடைபெற்றது. பட்டாபிராமிலுள்ள கம்பெனியொன்றில் சிமெந்து களவாடிவிட்டதாகக் கூறி கிருஷ்ணன் என்ற 18 வயது வாலிபனை எஞ்ஜினியர் முன்னிலையில் அக்கம்பெனிக் காவல்காரரும் இன்னுமொருவரும் சேர்ந்து தடியால் அடித்துத் தீவைத்தனராம். அவரின் தகப்பனர் அவரை ஆஸ்பத்திரில் படுகாயங்களுடன் சேர்த்தாராம்.

### பூமி அதிர்ச்சி

சென்னை நாகமலைப் பகுதியில் சென்ற புதன்கிழமை காலை 8-24-க்குக் கடுமையான பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.

### நேரு அஸ்திக்கு நடிகர்கள் அஞ்சலி

சென்னை ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள நேருவின் அஸ்திக்குத் திரைப்பட நடிகர்களான சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி ஆகியோர் மாலை சூடி அஞ்சலி செலுத்தினர்.

### 'நகைச்சுவை' மதுரம் வீட்டில் திருட்டு

மாம்பலம் பார்த்தசாரதி புரத்திலுள்ள நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணனின் மனைவி டி. ஏ. மதுரம் வீட்டில் துணிகரத் திருட்டு ஒன்று நடைபெற்றது. மதுரத்தின் வீட்டில் வேலைக்காரனுக இருக்கும் பாலதண்டாயுதமே இத் திருட்டைச் செய்திருப்பதாக நம்பப்படுகிறது.

# சாஸ்திரியுடன் ஷேக்அப்துல்லா பேச்சு

## லண்டன் செல்வது பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை

புதுடில்லி, ஜூன் 11

முன்னுள் காஷ்மீர் பிரதமர் திரு. ஷேக் அப்துல்லா நேற்றிரவு இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியைச் சந்தித்துப் பேசினுர். காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அடுத்து எடுக்கப்படவேண்டிய முயற்சிகள் பற்றியும் இருவரும் ஆலோசனை நடத்தியதாகத் தெரிகிறது. திரு. ஷேக் அப்துல்லா இன்று ஸ்ரீநகர் செல்கிருர்.

திரு. சாஸ்திரியைச் சந்தித்த பின் நிருபர்களிடம் திரு. ஷேக் அப்துல்லா பேசுகையில் காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாகத் தாம் இதுவரை மேற்கொண்ட முயற்சிகளிலும் பேச்சுவார்த்தைகளிலும் பூரண திருப்தியடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரியும், பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கானும் லண்டன் செல்லும்பொழுது அங்கு இருவரும் சந்திக்கும் சமயத்தில் தாமும் லண்டன் சென்று அவர்களுடன் கலந்துகொள்வது பற்றித் தாம் இன்னும் முடிவுசெய்யவில்லை யென்றும் திரு. ஷேக் அப்துல்லா தெரிவிததார்.

---

### குற்றச்சாட்டு

வியன்டைன், ஜூன் 11

லாவோசிலுள்ள இந்திய வைத்திய உதவிக் குழு 'சட்ட விரோத நடவடிக்கைகளில்' ஈடுபடுவதாக கம்யூனிஸ்ட் பதட்லாவோ வானெலி குற்றம்சாட்டியுள்ளது.

---

### தளபதி தூதராகிருர்

புதுடில்லி, ஜூன் 11

இந்திய விமானப்படைத் தளபதியாக இருந்து ஓய்வு பெறும் எயர் மார்ஷல் என்ஜினியர் ஈரானில் இந்திய ஸ்தானிகராகநியமிக்கப்பட்டுள்ளார்.

---

### மங்கோலியா கண்டனம்

லண்டன், ஜூன் 11

ஆசிய—ஆபிரிக்க உச்சி மகாநாட்டில் சோவியத் யூனியன் கலத்துகொள்வதற்கு உரிமை இல்லை யென்று சீன கூறி வருவதை மங்கோலியா கண்டித்துள்ளது.

## 23 நாகர்கள் கொல்லப்பட்டனர்

இம்பால் ஜூன் 11

இந்தியா பாதுகாப்பு படையினர் மணிபுரியிலுள்ள மறைவிடங்களை, ஐந்து தினங்களுக்கு முன் தாக்கியபொழுது 23 நாகர் இனத்தினர் கொல்லப்பட்டனர் என்று உத்தியோகபூர்வமான அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மறைவிடங்களிலிருந்து துப்பாக்கிகள், ஆயுதங்கள், எறிகுண்டுகள் செய்யக்கூடிய பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டனவென்றும், இவர்கள் தங்களின் பகுதிகளுக்கு சுதந்திரம் அளிக்கும்படி போராடி வந்தார்களென்றும் கூறப்படுகிறது.

---

### டிரினிடாட் கவர்னர் ஜெனரல்

கராச்சி, ஜூன் 11

டிரினிடாட் டுபாகோ நாட்டின் கவர்னர் ஜெனரல் பாகிஸ்தானில் சில தினங்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு இன்று கராச்சி வந்துசேர்ந்தார்.

---

### ருமேனியா கோஷ்டி திரும்பியது

மாஸ்கோ, ஜூன் 11

முக்கிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சிவுஸ்ரோசியா தலைமையிலுள்ள ருமேனியா தூதுகோஷ்டியொன்று சோவியத் ரஷ்யாவில் இருவாரங்கள் சுற்றுப்பிரயாணம் செய்த பின் நேற்று முன்தான் புஸ்சாறஸ்டுக்கு வந்து சேர்ந்தது

இவ்விஜயத்தின்போது இருநாடுகளுக்குமிடையேயுள்ள எதிர்கால பொருளாதாரக் கஷ்டங்கள் பற்றி விவரமாக விவாதிக்கப்பட்டதென்றும் சோவியத் ஜனதிபதி, மற்றும் இரு சோவியத் கம்யூனிஸ்ட் தலைவர் ஆகியோருடன் 13 அங்கத்தவர்களைக் கொண்ட அக்கோஷ்டி இறுதிப் பேச்சுவார்த்தை நடத்தியதென்றும் கூறப்படுகிறது.

# தென் வியட்நாமிற்கு புதிய அரசியல் அமைப்பு திட்டம்

## இம்மாதம் 17-ந் திகதி பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படும்

சைகோன், ஜூன் 11

புதிய அரசியல் அமைப்பு திட்டமொன்றை கூடியவிரைவில் தீட்டுமாறு தென்வியட்நாம் பிரதமமந்திரி மேஜர் ஜெனரல் நூயென்கான் அரசியல்வாதிகளைக் கொண்ட குழு ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 17-ந் திகதி அக்குழுவின்புதிய அரசியல் அமைப்பு திட்டத்தின் நகலொன்றை பிரதமரிடம் சமர்ப்பிப்பதற்குத் தயாராக வைத்திருப்பார்களென்றும் மந்திரிசபையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள்பற்றி பேச்சுவார்த்தைகள் நடைபெறுமென்றும் தெரிய வருகிறது.

ஏற்கணவேயிருந்த ஜனநாயக அரசியல் அமைப்பு திடடத்தை கடந்த நவம்பர் மாதம் டியம் அரசாங்கத்தை வீழ்த்தி ஆட்சியை கைப்பற்றிய ஜின்ரா அரசாங்கம் முற்ருக நிராகரித்து விட்டதென்றும், ஆனல் திரும்பவும் மாற்றமேற்பட்டு ஜனவரியில் நடைபெற்ற புரட்சியின் காரணமாக ஜெனரல் கான் ஆட்சியை கைப்பற்றியதால் மீண்டும் அரசியலமைப்பு திட்டத்தை மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்றும் அறியப்படுகிறது.

தென்வியட்நாமிலுள்ள சகல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 36 முக்கிய பிரமுகர்கள் அரசியல் அமைப்பை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# புற்றுநோயை எதிர்த்து பிரசாரக் கூட்டம்

## பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும்

நல்லூர், வியாழன்

யாழ்ப்பாணத்தில் இப்போது பரவி வரும் புற்றுநோயைத் தடை செய்யுமுகமாக யாழ்ப்பாண மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கம் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாகங்களிலும் பிரசாரக் கூட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது.

மக்கள் புற்று நோயைப் பற்றி விரிவாக அறிந்துகொள்ளவும், அந்த நோய் தம்மைப் பிடிக்காதவாறு பார்த்துக் கொள்ளவும் இந்தப் பிரசாரக் கூட்டங்களில் வேண்டிய ஆலோசனைகள் வழங்கப்படும்.

வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் இந்தப் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. பிரசாரக் கூட்டங்களிற் கலந்து கொள்ள இலங்கை புற்று நோய் நிவாரண சங்கத் தலைவர் டாக்டர் எம். ஜே. ஏ. சந்திரசேகரா யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் புற்றுநோய்த் தடைப் பிரசார இயக்கத்தை டாக்டர் சந்திரசேகரா திறந்து வைப்பார். அன்று மாலை யாழ். மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கத்தினர் டாக்டர் சந்திரசேகராவுக்கு தேநீர் விருந்துபசாரமளித்துக் கௌரவிப்பார்.

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றுவரும் மக்கள் சுகாதாரவிழா நிகழ்ச்சிகளில் சனிக்கிழமையன்று டாக்டர் சந்திரசேகரா புற்றுநோய் பற்றி விரிவுரை நிகழ்த்துவார். இக்கூட்டத்தில் யாழ்ப்பாண புற்றுநோய்த் தடுப்பு இயக்கத் தலைவர் டாக்டர் கனகரத்தினமும் கலந்து கொள்வார். மறுநாள் பண்டத்தரிப்பில் நடைபெறும் பிரசாரக் கூட்டத்தில் டாக்டர் சந்திரசேகரா உரை நிகழ்த்துவார்.

புற்றுநோய் யாழ்ப்பாணத்தில் பெருமளவு பரவுவதற்கு வெற்றிலை போடுவதும் ஒரு காரணமாகக் கருதப்படுவதனால் யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்த்தடைப் பிரசாரம் அவசியமெனக் கருதப்படுகிறது.

கடந்த வருடங்களைவிட தற்போது யாழ்ப்பாணத்தில் புற்றுநோயால் மரணமானவர்கள் தொகை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

---

## "தமிழர் பெருமை அடையவேண்டும்"

நல்லூர், வியாழன்

"கம்பர், வள்ளுவர் போன்ற தமிழ்ப் பெரியார்களினால் தமிழர்களாகிய நாம் பெருமை பெற்றிருக்கின்றோம். கம்பர், வள்ளுவரைப் போல புலமை மிக்கவர்களைத் தமிழகம் கண்டதில்லை" என்று இலங்கை கம்பன் கழகக் கூட்டத்தில் வித்துவான் பொன். அ. கனகசபை பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடிப் பாடசாலையில் இசைப்புலவர் சி. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வித்துவான் கனகசபை தொடர்ந்து பேசியதாவது:

தமிழ்பேசும் மக்கள் தமக்குப் பெருமை தேடித்தந்த பெரியார்களை நினைவுகூரவேண்டும். தமிழ்ப் பெரியார்களை நாம் மறந்துவிடாமல் விழாக்கள் நடத்திவரவேண்டும். விழாக்களினால் மக்கள் புத்துணர்ச்சி பெறுகிறார்கள். மாணவர்களும், பிள்ளைகளும் தமது இளம் வயதிலிருந்தே தமிழ்ப் பெரியார்களைப் பற்றி அறிந்துகொள்ள வசதிசெய்யப்படவேண்டும்.

---

## வடமராட்சி சுகாதாரவிழா

பருத்துத்துறை, வியாழன்

வடமராட்சிப் பகுதிச் சுகாதாரவிழாவின் இறுதி நிகழ்ச்சிகளான பொதுக்கூட்டமும் பரிசளிப்பும் வல்வெட்டித்துறைச் சிதம்பராக் கல்லூரியில் ஞாயிறன்று நடைபெறும்.

வல்வெட்டித்துறை பட்டின சபைத் தலைவர் திரு. க. சபாரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் ஆகியோர் பிரதம பேச்சாளராகக் கலந்துகொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## டயர்பட்டரி கிடைக்கும்

கொழும்பு, வியாழன்

மலிவான விலையில் சைக்கிள் டயர்களையும், டியூப்புகளையும், டோர்ச் லைட் பட்டரிகளையும் விற்பனைசெய்யக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

டோர்ச் லைட் பட்டரி ஒன்றின் விலை 45 சதமென்றும், ஒருவர் மூன்று பட்டரிகளை வாங்கலாமென்றும், எத்தனை பட்டரிகள் வாங்க விரும்புகின்றாரோ அத்தனை பழைய பட்டரிகளை ஒப்படைக்கவேண்டுமென்றும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். டயர்கள், டியூப்புகள் வாங்க விரும்புபவரும் இவ்விதம் பழைய டயர், டியூப் ஆகியவற்றை ஒப்படைத்து இவற்றைப் புதிதாக வாங்கிக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இருவருக்குச் சிறைத்தண்டனை

### லொறி பறிமுதல்

அநுராதபுரம், வியாழன்

40 சட்டவிரோதக் குடியேற்றக்காரரை லொறியில் ஏற்றிச் சென்ற குற்றத்துக்காக நாத்தாண்டியாவைச் சேர்ந்த ஜே. டொன்விமலதாசா என்பவருக்கும் ஆப்ரகாம் ரசாக் என்பவருக்கும் முறையே மூன்று வருடசிறைத் தண்டனையும் இரண்டு வருடச் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

மேற்கண்ட இருவரும் அநுராதபுரம் மாஜிஸ்திரேட் திரு. பி. மரபானே முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இருவருக்கும் சிறைத்தண்டனை வழங்கியதோடு சட்ட விரோதக் குடியேற்றக்காரரை ஏற்றிச் சென்ற லொறியையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரரை ஏற்றிவந்த லொறியில் பௌத்த கொடி ஒன்று பறக்கவிடப் பட்டதாகவும் யாத்திரிகர்களை ஏற்றிச் செல்வதாக ஏமாற்றும் நோக்கமாகவே இவ்விதம் செய்யப் பட்டதாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

---

## நாவலப்பிட்டிக்கு பிரதமர் செல்வார்

நாவலப்பிட்டி, வியாழன்

இலங்கைப் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா இம்மாதம் 13-ந் தேதி நாவலப்பிட்டிக்கு விஜயஞ்செய்யும்போது பல இடங்களுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளார்.

எட்டுநிகழ்ச்சிகளில் பிரதமர் கலந்துகொள்ளுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது. கடைசி நிகழ்ச்சியான பொதுக்கூட்டம் ஜெயதிலகா பார்க்கில் நடைபெறும்.

---

## சுழிபுரத்தில் சங்காபிஷேகம்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் 1008 சங்காபிசேகம் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கின்றது. அன்று விசேட அபிசேக ஆராதனைகளும் உயர்தர சங்கீதக் கச்சேரி மேளக் கச்சேரியும் நடைபெறுமென அறிவிக்கப் படுகிறது. சுழிபுரம் வாலிபர்கள் முயற்சியால் நடைபெறும் இவ்வைபவத்துக்கு பெரியோர்கள் பொருள் உதவி புரிந்துள்ளார்கள்.

---

## பாராட்டை விரும்பாத ஆசிரியர்!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சேணியதெரு ஆங்கில வித்தியாசாலையில் 35 ஆண்டுகள் ஆசிரியராக கடமையாற்றிய திரு. ஏ. கே. வல்லிபுரம், சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

பாடசாலை ஆசிரியர்களாலும், மாணவர்காலும் சேவை நலம் பாராட்டு விழா ஒழுங்கு செய்யப்பட்டபோது, தமக்கு எவ்விதமான பாராட்டும், புகழ்ச்சியுரையும், அன்பளிப்பும் தேவையில்லையென அவர் கூறிவிட்டார்.

---

## தெகியோவத்தைக்கு பிரதமர் விஜயம்

கொழும்பு, வியாழன்

பிரதமர் திருமதி பண்டாரநாயகா இம்மாதம் 20-ம் திகதி தெகியோவத்த தொகுதிக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

பிரதமரை அங்கு வரவேற்பதற்கான ஏற்பாடுகளை தெகியோவத்த எம். பீ. திருமதி சோமா விக்கிரமநாயகா செய்துவருகிறார்.

தெகியோவத்தையில் கட்டப்படவிருக்கும் மகா வித்தியாலயத்துக்கான அடிக்கல்லை பிரதமர் நாட்டவிருக்கிறார்.

---

## மாணவர்கள் மீது நச்சுத்திராவகம்வீசப்பட்டது

மக்கோன, வியாழன்

நிபொட வித்தியாலயத்தைச் சேர்ந்த ஐந்து மாணவர்களின் உடலில் நச்சுத்திராவகம் வீசப்பட்டு எரிகாயங்கள் ஏற்பட்டதனால் நாகொட ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டார்கள். கிங்ஸ்லி சனத் (வயது 7), இந்திராணி முனசிங்கி (வயது 10), சி.ஏச். சோமாவதி (வயது 11) கே. டி. நந்தசேன (வயது 14), ஆர். சுமணசிறி (15 வயது) ஆகியவர்கள்தான் இவர்கள்.

ஆர். ரங்கநோன என்ற எழுபது வயதுப் பெண்ணுடன் இவர்கள் வம்புச் சேட்டைகளுக்குப் போன போது அப்பெண் ஆத்திரமடைந்து இவர்கள் மீது நச்சுத்திராவகத்தை வீசினர்.

தெபுவன பொலிஸ் சார்ஜன்ட் குணவர்த்தன அப்பெண்ணை விசாரணை செய்தார்.

---

## புத்தகங்கள் அச்சிடுவது அதிகரிப்பு

கொழும்பு, வியாழன்

உத்தியோக மொழி இலாகாவிற்காக பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடுவது இவ்வருடத்தில், தொடர்ந்து அதிகரித்துக்கொண்டு வருவதாக அரசாங்க அச்சு பகுதியின் வருடாந்த நிர்வாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அரசாங்க வர்த்தமானி, மற்றும் வேறு சில புத்தகங்களும் பெருமளவில் அச்சிடப் பட்டுவருவதாகவும், வாழைச் சேனை காகிதத்தொழிற்சாலை தொடர்ந்து சகலவிதமான காகிதங்களையும் விநியோகித்து வருவதாகவும், சிறந்த வேலைகளுக்குப் பாவிக்கக்கூடிய சில சிறந்த காகிதங்களை மட்டும் காகிதத்தொழிற்சாலை வழங்கவில்லையென்றும் அந்த அறிக்கையில் மேலும் கூறப் பட்டுள்ளது.

---

## பளையில் சுகாதார வார விழா

பளை, வியாழன்

"மக்களால் மக்களுக்குச் சுகாதாரங்களைச் செய்து கொடுப்பதே சுகாதாரமாகும். சுகாதார விதிகளைக் கடைப் பிடிப்பதில் மக்களுக்கு சுய உணர்ச்சி வேண்டும்."

இவ்வாறு பளை மகாவித்தியாலயத்தில் மக்கள் உடல் நல வாரத்தை முன்னிட்டு நடைபெற்ற சுகாதார மாவட்ட விழாவில் வைத்திய அதிகாரி திரு. கே. கதிர்காமசேகரம் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"அநேக பிள்ளைகள் மண்ணெண்ணெய் போன்ற நச்சுத் திராவகங்களுக்குப் பலியாகும் வழக்கம் அதிகரித்துவருகிறது. இதைத் தாய்மார்கள் அவசியம் கவனிக்கவேண்டும்."

வடமாகாண சௌக்கிய சேவை அதிபர் திரு. ஜி. என். ஆர். நதானியல் இவ்விழாவிற்குத் தலைமைவகித்தார். பளை அரசினர் வைத்திய அதிகாரி திரு. ரி. நாகரத்தினம் விழாக்கொடியை ஏற்றிவைத்தார்.

திரு. கே. கதிர்காமசேகரம், திரு. செ. சேனாதிராசா, திரு. ஏ. ஜி. ராஜசூரியர், திரு. ச. சின்னத்துரை, திரு.என். எஸ். சேதுகாவலர் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்கள்.

மாணவ, மாணவிகளது இசை, நடன, நாடக, பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன.

போட்டிமுடிவுகள் பின்வருமாறு:-

பேச்சு: 1-ம் இடம்- சி. சி. பாடசாலை, 2-ம் இடம்- சி. சி. பாடசாலை அல்லிப்பளை 3-ம் இடம்- ஆர். சி. பாடசாலை புலோப்பளை.

பாட்டு: 1-ம் இடம்- பளை அரசினர் மகாவித்தியாலயம், 2-ம் இடம்- ஆரசினர் பாடசாலை இயக்கச்சி, 3-ம் இடம்- சி. சி. பாடசாலை அல்லிப்பளை.

நடனம்: 1-ம் இடம்- பளை அரசினர் மகாவித்தியாலயம், 2-ம் இடம்- சி. சி. பாடசாலை, 3-ம் இடம்- சி. சி. பாடசாலை அல்லிப்பளை.

நாடகம்: 1-ம் இடம்- சி. சி. பாடசாலை அல்லிப்பளை, 2-ம் இடம்- பளை அரசினர் மகாவித்தியாலயம், 3-ம் இடம்- சி. சி. பாடசாலை சோறன்பற்று.

---

## பிக்குகளாக பத்து அமெரிக்கர்கள்

கொழும்பு, திங்கள்

பத்துப்பேர் கொண்ட முதலாவது குழு அமெரிக்காவிலிருந்து விமானமூலம் பிக்குகளாக விசுவாசப்பிரமாணம் எடுத்துக்கொள்வதற்காக வெகுவிரைவில் இலங்கை வரவிருக்கிறார்கள்.

வண. பன்னசீக மகாநாயக்க தேரோ அமெரிக்காவுக்கு விஜயம் செய்ததன் விளைவுதான் இது.

அமெரிக்காவிலுள்ள பொஸ்ரேனில் புத்த விஹாரை ஒன்று கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

---

## சுகாதார விழா

யாழ்ப்பாணம், வியா.

இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையில் மக்கள் சுகாதார விழாவையொட்டிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. இந்நிகழ்ச்சிகளில் இணுவிலில் உள்ள மூன்று பாடசாலைகளின் மாணவர்களும் நாவடித் தமிழ்க் கலவன்பாடசாலை மாணவர்களும், உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, சங்குவேலி அ. த. க. பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களும் கலந்து கொண்டனர். ஆரோக்கிய மாதர் தெரிவும நிகழ்ந்தது. போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு உடுவில் கிராம சபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் பரிசு வழங்கினார். உடுவில் சுகாதாரப் பரிசோதகர் திரு. க. பொன்னம்பலம் அனைவர்க்கும் நன்றி கூறினார்.

---

## ஆஸ்பத்திரி ஊழியர் கவனக்குறைவா?

### மரணம் பற்றி மகஜர்

பதுளை, வியாழன்

"பதுளை ஆஸ்பத்திரியில் பிரசவ வார்ட்டிலிருந்த பிரேமாவதி ரத்னாயக்கா எப்படி இறந்தார் என்ற 500 பேர் கையெழுத்திட்ட மனு ஒன்றை சுகாதார மந்திரிக்கு பதுளையைச் சேர்ந்தவர்கள் அனுப்பியுள்ளார்கள். கல்விப் பகுதி இயக்குநருக்கும், பதுளை மேயருக்கும் இதன் பிரதிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

குழந்தை பிறந்தபிறகு கீழே இறங்கமுடியாத நிலையில் மலசலக் கோப்பைக்காக ஒருவரை அழைத்து எவரும் வராத காரணத்தால் அப் பெண்மணி கட்டிலிருந்து நடக்க நேரிட்டதாகவும், அதனால் விழுந்து மரணம் சம்பவித்ததாகவும் அம்மனு கூறுகிறது. பிரசவவார்ட் அதிகாரிகளின் கவனயின்மைதான் இதற்குக் காரணமென்று மனுவில் குறிப்பிட்டுள்ளார்கள்.

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்க சமயப் பிரசாரசபையினரால் நல்லூர் சண்முகதீர்த்த மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6-45 மணி முதல் இரவு 8 மணிவரை ஸ்ரீமத் வி. எஸ். எஸ். மணிபாகவதர் தலைமையில் திரு. த. சுப்பிரமணியம் "கார் கார் நமனர் கலகம் செய்யும் நாள்" என்னும் பொருள்பற்றியும் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மாலை 6 மணி முதல் 7 மணிவரை ஆசிரியர் திரு. க. முருகேசு "சமயவழிபாடு" என்னும் பொருள்பற்றியும் நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகர் ஆலயத்தில் சமயப் பிரசாரகர் திரு. சி. தம்பிஐயா "ஆலயவழிபாடு" என்னும் பொருள்பற்றியும் பிரசங்கங்கள் நிகழ்த்தப்படும்.

---

## இலங்கை கரையில் நேருவுக்கு அஞ்சலி

பருத்தித்துறை, வியாழன்

காலஞ்சென்ற பாரதப் பிரதமர் நேரு அவர்களின் அஸ்தி கரைப்பு வைபவத்தையொட்டி இங்குள்ள இந்திய சமூகத்தினர் அவருக்கு அஞ்சலி செய்யுமுகமாக கடற்கரை மைதானத்தில் பொதுக் கூட்டம் ஒன்றை நடாத்தினர்.

பலநூற்றுக்கணக்காேனோர் மலர்களைக் கடலில் போட்டு வணங்கி தமது அஞ்சலியைத் தெரிவித்ததைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்திற்கு வழக்கறிஞர் திரு. கே. ஜெயக்கொடி தலைமை வகித்தார்.

திக்கம் மெதடிஸ்த பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. ஜே. வி. சரவணமுத்து இராங்கற்பாக்கள் பாடியதுடன் வித்துவான் ஏ. கே. வேலன், பண்டிதர் மு. ஏரம்பமூர்த்தி ஆகியோர் சொற்பெருக்காற்றினர்.

---

## அல்வாயில் மக்கள் சுகாதார விழா

வல்வெட்டித்துறை, வெள்ளி

அல்வாய் முத்துமாரியம்மன் கோவில் வீதியில் இன்று மாலை அல்வாய் வட்டார சுகாதாரவார விழா ஆரம்பமாகும். கட்டைவேலி கிராமசபைத் தலைவர் திரு. இ. சச்சிதானந்தம் தலைமைவகிப்பார். உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், திரு. வே. சிவக்கொழுந்து (யாழ்ப்பாணன்) ஆகியோர் விழாவில் சொற்பொழிவாற்றுவார்கள். அல்வை மன்றத்தினரின் 'கவலை தீர்ந்தது' என்ற நாடகமும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது

## வரி விளம்பரம்

### தேவை

தேசியசவீப் வீடுவீடாகவோ கூட்டங்கள் உள்ள இடங்களுக்கோ கொண்டு திரிந்து விற்பதற்கு யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும் கிராமத்திற்கு ஒரு ஆள் தேவை. ரூ.100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும். கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ், நல்லூர்யாழ்ப்பாணம், தொலைபேசி: 461.
493.

பிரிண்டிங், என்லார்ஜிங் முதலிய டாக்றூம் வேலைகளில் நல்ல அநுபவ முள்ளவர்கள் தேவை. அநுபவத்திற்கும், ஆற்றலுக்கும் ஏற்பச் சம்பளம் வழங்கப்படும். நேரில் விண்ணப்பிக்கவும். செல்லம்ஸ் போட்டோகிராபர்ஸ், 94-96, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 505

வடமாகாண ஆசிரியர்சங்கத்தினதும், அதனுடன் இணைந்த சகாய நிதிச் சங்கத்தினதும், பரீட்சை சபையினதும், நிர்வாக அலுவலகத்திற்கு ஓர் உதவியாளர் தேவை. தமிழ் ஆங்கிலத் தட்டெழுத்து அறிவும், மேற்படி சங்கத்தில் அங்கத்துவம் வகித்து இருந்தமையும் விசேட தகைமைகளாகக் கவனிக்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 20-6-64.

பொதுச் செயலாளர்,
வடமாகாண ஆசிரியர் சங்கம்,
யூனியன் கல்லூரி,
495 தெல்லிப்பழை.

யாழ்ப்பாணத்திலுள்ள நர்ஸிங் ஹோம் (Nursing-Home) ஒன்றிற்கு ஒரு நர்ஸ் மிட்வைவும் (Nurse-Midwife) இரண்டு நர்ஸ்மாரும் (Nurses) தேவை. விண்ணப்பிக்கவும்: C/o ஈழநாடு 490

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின்மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண்களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துவாவு போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்:
கபிரியல்வைத்தியசாலை, சுன்னாகம்
GABRIELS, Chunnakam. 278

### பிரபல சோதிடம்

சாதக பலன் ரூபா 3-00. ரேகை பலன் ரூபா 2-00. ஆருட பலன் ரூபா 1-00. S. சிவகுருநாதன், 160, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 454

### பண வசதி

அடகு நகைகள் மீட்டுக் கொடுக்கப்படும். பவுண் நகைகள் வாங்கப்பெறும். தேவையான நகைகள் அரைக் கூலியுடன் விற்கப்பெறும். கந்தசாமிச், செட்டியார், 123/3 அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். 499

### விற்பனைக்கு

சில நாட்களுக்குமுன் முழு வேலையையும் செய்யப்பட்ட நல்ல நிலைமையிலுள்ள EY 8205 சோமசெற் கார் ஒன்று விற்பனைக்கு உண்டு. ஆனந்தகிரி, கதுமலைச் சந்தி, மாணிப்பாய் என்ற விலாசத்தில் பார்வையிடலாம். 512

### எஸ்-லோன் பயிற்சி

பிளாஸ்ரிக் (எஸ்—லோன் & பொலிகன்) நீர்க் குழாய்களும், மின்குழாய்களும் உபயோகிக்கும் முறைகளில் "ராஜேந்திரம்ஸ் லிமிடெட்" நிபுணர்களால் ஜூன் 15, 16, 17ம் திகதிகளில் கீழ்க்கண்ட இடத்தில் விரும்புவோருக்கு இலவச பயிற்சி அளிக்கப்படும். நந்தி இன்டஸ்ரீஸ் அன்ட் ஏஜென்சீஸ் லிமிடெட், 20, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 513


# கிராமியக் கலைகளை மக்கள் பாதுகாக்கவேண்டும்

## விளையாட்டு விழா கலைநிகழ்ச்சியில் பேச்சு

நல்லூர், வியா.

"தேசிய விழாக்களைத் தொடர்ந்து நடத்துவதன் மூலம் கிராமியக் கலைகளைப் பாதுகாக்கும் பணியில் மக்களை ஈடுபடுத்தவேண்டும். கிராமியக்கலைகளுக்குப் புத்துயிரளிக்கும்வகையில் யாழ். மாவட்ட சனசமூக நிலைய சமாஜத்தின செயல்பட்டுவருவது அனைவரதும் பாராட்டுக்குமுரியது" என்று வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் கீரிமலையில் நடைபெற்ற தேசிய விளையாட்டு விழாக்கலை நிகழ்ச்சிகளைத் தொடக்கிவைத்துப் பேசுகையில் கூறினர்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜம் நடத்திய தேசிய விழாவின் கலை நிகழ்ச்சிகள் கீரிமலை கடற்கரையில் நடைபெற்றன.

திரு. மாணிக்கவாசகர் மேலும் பேசுகையில், கிராம மக்கள் மத்தியில் இத்தகைய விழாக்கள் புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமெனக் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவர் சமூகஜோதி சி. தியாகராஜா விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசியதாவது:-

மக்களின் தன்மைதான் எதிர்காலத்தை நிர்ணயிக்கும். வலிமை மிக்க மக்கள் இனத்தைச் சிருஷ்டிக்கவேண்டும். எமது எல்லா கடற் பிரயாணங்களுக்கும் பிறநாடுகளை எதிர்பார்க்கிறோம். சிறந்த வாலிப கடற்படையை உருவாக்கும் முயற்சிக்கு முன்னேடியாக சிறந்த மாலுமிகளை உருவாக்கவேண்டும்.

பண்டைக்காலத்தில் இருந்ததுபோல், வடபகுதித் துறைமுகங்களுக்கும் தென்னிந்தியாவிற்கும் போக்குவரவு தடையற்றதாக இருக்கவேண்டும். கடல் தொடர்பை வலுவாக்குவதன்மூலம் சட்டவிரோதக் குடியேற்றப் பிரச்னையைத் தீர்க்கக்கூடும். இதனைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும்

ஆஸ்திரேலியா தூதர் திரு. பி. சி. பலாட் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நாதஸ்வர இசைச் செல்வன் எம். எஸ். சண்முகநாதன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி, சனசமூக நிலையங்களின் காவடி நடனங்கள், கரகம், கோலாட்டம் ஆதியாம் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இக்கலை நிகழ்ச்சிகளின் இறுதியில் ஆஸ்திரேலிய தூதுவர் திரு. பி. சி. பலாட் பரிசில்களை வழங்கினர்.

நாதஸ்வரக கலைஞர் திரு. எம். எஸ். சண்முகநாதனுக்கு தங்கப்பதக்கமும், சானறிதழும் வழங்கப்பட்டது. ஆஸ்திரேலிய தூதுவர் திரு. பி. சி. பலாட் பிரஸ்தாப தங்கப் பதக்கத்தைச் சூட்டிக் கௌரவித்தார்.

காவடி நடனப் போட்டியில் முதலிடம் பெற்ற அளவெட்டி அம்பிகா சனசமூக நிலையத்தினருக்கு வெற்றிக்கிண்ணம் பரிசளிக்கப்பட்டது. சுழிபுரம் கலைமகள் ச. ச. நிலையம், சித்தங்கேணி நேருஜீ ச. ச. நிலையம் என்பன 2ம், 3ம் இடங்களைப் பெற்றன. மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு. க. பொன்னுச்சாமியின் அலங்காரச் சபபரத்திற்கு சான்றிதழும் வழங்கப்பட்டது.

## விளையாட்டுப் போட்டி

வல்வெட்டித்துறை, வியா.

வல்வெட்டித்துறை சிதம்பராகக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இம் மாதம் 21-ந் தேதி பருத்தித்துறை நீதிபதி ஜனப் எம். அப்துல்காதர் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

---


## திருமண அழைப்பு

திரு. சின்னையாபிள்ளையின் மகன் திருநிறை செல்வன் தில்லைநாதன் அவர்களுக்கும், திரு. கந்தையா நடராசாவின் புத்திரி திருநிறை செல்வி மணிமேகலை அம்மாளுக்கும் நிகழும் குரோதி வருடம் வைகாசி மாதம் 31-ந் திகதி (13-6-64) சனிக்கிழமை இரவு 10-48—1-12 மணிவரை வரும் சுப முகூர்த்தத்தில் மணமகள இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவததில் உறவினர்களையும், நண்பர்களையும் சமுகந்தந்து மண்மக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நா. க. சின்னையாபிள்ளையும்
பாரியாரும்.
93, அரசடிரோட்,
யாழ்ப்பாணம். 509

## ஹோமியோபதி வைத்தியர்களின் கவனத்திற்கு!

டாக்டர் கரீமின் சிறந்த டானிக்குகள், (1) Golden Vigour Tonic (தங்கசத்திதிராவகம்) நரம்பு தளர்ச்சியைப் போக்கி வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவிக்கச் செய்யும். (2) Golden Iron Tonic (அயத் தங்க திராவகம்) பாண்டு, இரத்தசோகைமுதலிய இரத்த சம்பந்தமான வியாதிகளைப் போக்கி நல்ல இரத்தத்தை விருத்தி செய்யும். பத்தியம் இல்லை. நல்ல சத்துள்ள சாப்பாடுகள் சாப்பிடவேண்டும். ஒரு மாதம் தொடர்ந்துமருந்து சாப்பிட்ட பின் திருப்தி இன்றேல் பாவித்த போத்தல்களை கொடுத்தால் பணம் வாபஸ் செய்யப்படும். Sole Agents: M. M. L. Muhamad Abdul Cader Hadjiar & Sons, 91—93, K. K. S. Road, Jaffna.
511


## இன்று

அல்லிப்பளைப் பெரியதம்பிரான் ஆலயத்திலிருந்து காலை 6 மணிக்குப் புறப்படும் பச்சிலைப்பள்ளிப் பாதயாத்திரைக் குழுவினர் திருமுறைகள், புராணங்கள், பாரதம், பாகவதம் ஆகிய வேதங்களுடன் வீரகத்தி விநாயகப் பெருமானின் திருவுருவத்தைத் தாங்கி புலோப்பளை, கச்சார் வெளி, நவனிவெளி மார்க்கமாச இத்தாவில் முருகமூர்த்தி ஆலயத்தையடைந்து அங்கு மாகேசுர பூஜை நடாத்தியபின் கொட்டடி விநாயகராலய மார்க்கமாக ஆசிரமத்தைச் சேர்வர். பாதயாத்திரையின்போது ஸ்ரீ பழனியாண்டவர் ஆசிரம பஜனைக் கோஷ்டியினர் பஜனை செய்வர். பகல் 11-30 மணி முதல் 12-00 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் வீரவிநாயக பிரதிஷ்டை நிகழும்.

∴ ∴ ∴

பன்னாலை ஞானவைரவராலயத்தில் பெரிய புராண விரிவுரைப் பூர்த்திவிழா நடைபெறும். கதாகாலக்ஷேபம், சொற்பொழிவு, பக்திப்பாடல்கள் ஆதிய நிகழ்ச்சிகள் நிகழ்ச்சிநிரலில் இடம் பெற்றுள்ளன.

∴ ∴ ∴

காலை 7 மணிமுதல் 8 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் விளிசிட்டி ஞானவைரவ சுவாமியின் 'வாலஸ்தாபன வைபவம்', ஆலயபரிபாலன சபையினரால் நடாத்தப்படும்.

∴ ∴ ∴

அச்செழு கண்ணகை அம்மன் கோவில் உற்சவத்தில் மாலை 6-30 மணியளவில் அளவையூர் திரு. வினசித்தம்பி கதாப்பிரசங்கம் செய்வார்.

∴ ∴ ∴

காங்கேசன்துறை கசாத்துறை ஆனந்தப் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம், பகல் 12 மணிக்கு நடைபெறும். சிவஸ்ரீ தி. கு. நகுலேஸ்வரக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார்.

## வேலைக்குத் திரும்பினர்

நல்லூர், வெள்ளி

காங்கேன்துறை ஸைப்பிளின் கம்பெனியில் புதன்கிழமை வேலை செய்ய மறுத்த தொழிலாளர்கள் நேற்று வழமை போல வேலைசுகுத் திரும்பினர். தொழிலாளர்களின் கோரிக்கைகள் பற்றி கம்பெனி மேலதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுப்பார்கள் என்று உறுதியளிக்கப் பட்டதனைத் தொடர்ந்து தொழிலாளர்கள் வேலைக்குத் திருமபினர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி (12-6-64)

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

காலை 6-45 உதயகீதம், 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தோத்திரப்பாடல்கள்— சைவ மங்கையர்கழக மாணவிகள், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 இடைவேளை, 1-00 கதம்பம்.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி, 7-15 பாட்டு —பி. வைத்தியநாத சர்மா' 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புத்தகவிமர்சனம், 9-30 நேயா விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல், 7-30 காந்தி அஞ்சலி.

பகல் 12-00 தொழிலாளருக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 2-10 பாட்டு— தஞ்சாவூர் என். கமலா.

மாலை 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 பொங்யெழும் பாரதம், 7-45 பாட்டு— நேதனூரி கிருஷ்ணமூர்த்தி, 9-15 இசைமாலை, 9-30 மெல்லிசை, 9-45 பலகணி, 10-00 திரைப் பட இசை.

## பிடிவாதம் பலிக்கவில்லை

கச்சாய், வெள்ளி

பஸ் கண்டக்டர் பஸ்ஸில் இடமில்லையென்று பிடிவாதமாக மறுத்தபோதிலும், பொலிஸ் கான்ஸ்டபிள் பஸ்ஸில் போதியளவு இடமிருக்கிறதென்று கூறியதைத் தொடர்ந்து, வேறுவழியில்லாது ஒரு பிரயாணியை பஸ்ஸில் ஏற்றிச் செல்ல கண்டக்டர் சம்மதித்தார்.

பளை பஸ் நிலையத்தில் நின்ற ஒரு 'எக்ஸ்பிரஸ் பஸ்'ஸில் ஏறிய தாளையடி அப்போதிக்கரி திரு. சிற்றம்பலத்தை, பஸ் கண்டக்டர் இறங்கும்படி கூறினர். பஸ்ஸில் போதியளவு இடமிருப்பதாகக்கூறி அப்போதிக்கரி இறங்க மறுக்கவே, பஸ்ஸை பளை பொலிஸ் நிலையத்திற்கு ஓட்டிச் சென்றனர்.

அங்கு கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் பஸ்ஸில் போதியளவு இடமிருப்பதாகவும், அவரை ஏற்றிச் செல்லுமாறும் கூறினர். வேறு வழியில்லாது அந்த பஸ் கண்டக்டர் அப்பிரயாணியை ஏற்றிச் சென்றர்.

---

## மகளிர் கல்லூரி விளையாட்டுப்போட்டி

பருத்தித்துறை, வியாழன்

பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இம் மாதம் 15-ந் திகதி நடைபெற விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Cameron Mitchell
IN
The Last of The VIKINGS
(Totalscope – Eastmancolor)

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30
ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) ஜுப்பிட்டர் (குருணகலை) தாஜ்மஹால் (கல்முனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்
நானும் ஒரு பெண்

# கூட்டு அரசாங்கம் . . .

(1-ம் பககத் தொடர்ச்சி)

## என். எம். நிதி; எவரும் விலகவில்லை

சமசமாஜக்கட்சியுடன் கூட்டு சேர்ந்தால் சில மந்திரிகள் ராஜினாமாச் செய்யக் கூடுமென பெரும் வதந்தியுலவிய போதிலும் பழைய மந்திரிகளில் எவரும் ராஜினாமாச் செய்ய வில்லை. சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா நிதிமந்திரியாகவும் அதேகட்சியைச் சேர்ந்த திரு. அனில் முனசிங்கா தகவல் தொடர்பு மந்திரியாகவும் திரு. சம்லி குணவர்த்தன மராமத்து, வீடமைப்பு மந்திரியாகவும் நியமிக்கப்பட்டுள் ளனர். முன்னாள் நிதிமந்திரி திரு டி. பி. இலங்கரத்தின வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மக்களிடமிருந்து பொலிசார்மீட்டனர்

புதியமந்திரிசபை பதவியேற்றதும் ராணி மாளிகையிலிருந்து பிரதமர் முதலாவதாக வெளியேவந்து மந்திரிசபைக் கட்டடட்துக்குச் சென்றார். ராணிமாளிகையிலிருந்து வெளிவந்த டாக்டர் என். எம். பெரேராவை அங்கு கூடியிருந்த ஜனத்திரளில் ஒரு பகுதியினர் தோளில் சுமந்துசென்றனர். கூட்டத்தில் எடுத்துச் செல்லப்பட்ட டாக்டர் என். எம். பெரேராவை சுமார் 20 பொலிசார் பெரும்சிரமத்துடன்மீட்டனர். இதன்பின் மந்திரிசபைக் கட்டடவாயிலில் நின்று அவர் மக்களுக்கு நன்றி தெரிவித் தார். பின்னர் நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் புதிய மந்திரிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## பால்சோறு பரிமாறினர்

புதிய மந்திரிசபை பதவிப் பிரமாணம் செய்தலைத் தொடர்ந்து மந்திரிசபை அறையில் நடை பெற்ற முதலாவது மந்திரிசபைக் கூட்டத்தில் மந்திரிகள் 'பால்சோறு' பரிமாறிக்ருதூ கலித்தனர். இதற்கு முன்னர் இராணி மாளிகையில் உள்ள புத்த விக்கிரத்துக்கு முன்னால் பிரித் வைபவத்தை பல பிக்குகள் நடத்தி வைத்தனர். பிற்பகல் மூன்று மணிக்கு மந்திரிகள் வித்தியாலங்கார ஆலயத்துக்குச் சென்று தரிசித்தனர்.

## புதிய மந்திரிகள் வரலாறு

பாரிஸ்டரான திரு. அனில் முனசிங்கா 1956-ம் ஆண்டு சமசமாஜக்கட்சியின் ஆதரவில் அகல வத்தை எம். பி. யாக பார்லிமெண்டில் பிரவேசித்தார். திரு. முனசிங்காவுக்கு இப் பொழுது 37 வயது. சில காலங்களுக்கு முன்னர் இவர் கொழும்பு மாநகரசபையில் தெமெட்டகொடை வட்டார உறுப்பினராகப் பணியாற்றினர். ஐரோப்பிய பெண் ஒரு வரை திருமணம் செய்துள்ள இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

மிக இளமையிலேயே பார்லிமெண்டில் பிரவேசித்தவர்களில் திரு. சம்லி குணவர்த்தனவும் ஒருவர். பல வருடகாலமாக சமசமாஜக்கட்சியில் உழைத்துவரும் இவருக்கு தற் போது 48 வயது. புரக்டரான இவர் 1947-ல் களுத்துறை எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்டு பின்னர் 1952-ல் தோல்வியடைந்து மீண்டும் 1956-ல் தெரிவு செய்யப் பட்டு 1960-ம் ஆண்டு நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் தெரிவு செய்யப்பட்டார். திரு. சம்லி குணவர்த்தன மந்திரியாக நியமனம் பெறுவார் என நேற்றைய 'ஈழநாடு' பிரத்தியேகமாக செய்தி வெளியிட்டது வாசக நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இது பற்றி வேறெந்த ஆங்கில, சிங்கள, தமிழ் பத்திரிகையும் செய்தி வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ மனோஹரா
(யாழ்ப்பாணம்) போன்: 485

மாதர் காட்சி

13—6—64 சனிக்கிழமை பிற்பகல் 2-30 காட்சி மட்டும் ரூ. 1-25 கட்டணத்துடன் பல்கனி வரை உள்ள எந்த ஆசனத்துக்கும் செல்லக்கூடிய
அரிய காட்சி

அழகு நிலா

பிரவேச சீட்டுகளுக்கு
முதற் பரிசு: தங்கமோதிரம்,
இரண்டாவது பரிசு: ஒரு சோடி தோடு,
இப்படி பல பரிசுகளும் வழங்கப்படுகிறது

# மொழிப் பிரச்னை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரமாகவும், திறமையாகவும் இயங்க ஆலோசனை கூறுவதே இரகசிய வாக்கெடுப்புமூலம் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட இச்சபைகளின் கடமையாகும்.

மக்களுக்குத் திருப்திகர மான சேவை செய்யும் பொருட்டு அரசாங்க ஸ்தாபனங்களிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் கண்காணிப்பு கமிட்டிகள் சில சட்ட விதிகளுக்கமைய இயங்கி வரும்.

கிராம, நகரப் பகுதிகளில் லஞ்சத்தையும் ஊழல்களையும் கவனித்து கட்டுப்படுத்த அந்தந்த இடங்களிலுள்ள மக்களைக் கொண்ட கமிட்டிகள் ஸ்தாபிதமாகும்.

### 9. வர்த்தகம்

அத்தியாவசிய தேவைப் பொருட்களின் விநியோகத்தை கூ. மொ. வி. மேற்கொள்ளும். எல்லாத் தொகுதிகளிலும் இதன் சில்லறை விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டு, துணிவகைகள், கட்டட சாமான்கள், மருந்துவகைகள், உணவுப் பொருட்கள் ஆகியன விநியோகிக்கப்படும். கூட்டுறவுக் கடைகள் மூலமும், விற்பனவு நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்படும் பொருட்களின் விலை கட்டுப்படுத்தப்படும்.

அத்தியாவசியப் பொருட்கள் யாவும் அரசாங்க கார்ப்பரேஷன்கள் இறக்குமதி செய்யும். அவ்விதம் இறக்குமதி செய்யப் படாத பொருட்களை இலங்கையரான வர்த்தகர்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவர்.

ஏற்றுமதி வர்த்தகத்தை அரசாங்கம் படிப்படியாக ஏற்றுக் கொள்ளும்.

### 10. ஒத்துழைப்பு

சோஷலிஸ திட்டமொன்றை உருவாக்க மக்களின் ஒத்துழைப்பை பிரசாரம் மூலம் பெறுவது.

### 11. கோர்ட்டுகள்

லஞ்ச ஊழல் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை விசாரிக்க விசேஷ கோர்ட்டுகள் நிறுவப் படும்.

### 12. இந்தியர்பிரச்னை

இலங்கை பிரஜா உரிமை சட்டத்தின் கீழ் இதுவரை பிரஜா உரிமை பெருத இந்தியர்களின் பிரச்னையை தீர்த்து வைப்பதில் உள்ள முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்கு, மிக விரைவில் இந்திய-இலங்கை அரசாங்கங்கள் பேச்சுவார்த்தைநடத்த நடவடிக்கை எடுப்பது.

### 13. பத்திரிகைகள்

தினசரிப் பத்திரிகைகளை நடத்துவதில் உள்ள ஏகாதிபத்தியத்தை முறியடித்து அவற்றின் உரிமையை பரந்த அடிப்படையில் பகிர்ந்துகொள்ள சட்டங்கள் இயற்றுவது. இவற்றின் மூலம் பத்திரிகைகளின் ஜனநாயக சோஷலிஸ உரிமைகளை பலப்படுத்தி தனிப்பட்ட நிர்வாகத்தின் கீழுள்ள ஊழல்களை களைவது.

### 14. தேர்தல் ஒப்பந்தம்

சுதந்திரக்கட்சி - சமசமாஜக் கட்சி ஆகியவை சேர்ந்து தயாரிக்கும் திட்டத்தின் கீழ் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவது இந்த கூட்டு திட்டத்தில் இப்போது இரு கட்சிகளும் வகிக்கும் பிரதிநிதித்துவம் கவனிக்கப்படும்.

# புகையிலைவரி அதிகரிப்பால் வருமானம் அதிகம்

யாழ்ப்பாணம் வியாழன்

கடந்த வருடம் புகையிலை வரியை 20 ரூபாவில் இருந்து 28 ரூபாவாக அதிகரித்ததன் காரணமாக வருமானம் 17,674,956 ரூபாவாக அதிகரித்துள்ளதென்று கலால் இலாகாக் கமிஷனரின் நிதி வருட நிர்வாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தென்னங்கள், பனங்கள் ஆகியவற்றைப் போத்தலில் அடைத்து விற்பனைசெய்வதற்கு கொழும்பிலுள்ள கே. கே. மகாதேவன் கம்பெனிக்கும், பருத்தித்துறையிலுள்ள பெனின்சுலர் கம்பெனிக்கும் நிரந்தர லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் இரு நிரந்தர லைசென்ஸ் வழங்கப்பட்டிருப்பதாகவும் ஆனல் விண்ணப்பித்தவர்கள் செயலில் இறங்கவில்லையென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## யுதாண்ட்

நியுயோர்க், ஜூன் 11

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் வருகிற ஜூலை மாதம் பிரிட்டிஷ் மந்திரிகளுடன் பேச்சுக்கள் நடத்தவிருக்கிறார். பாரிசுக்கும், மாஸ்கோவுக்கும் செல்லும் வழியில் பிரிட்டனுக்கு வருமாறு அவர் அழைக்கப்பட்டிருக்கிறார். இதை ஏற்று அவர் லண்டன் செல்லும்போது பேச்சுக்கள் நடைபெறும்.

## சுகாதார வாரம்

நல்லூர், வெள்ளி

கோப்பாயில் நடைபெற்று வரும் மக்கள் சுகாதாரவார விழா நிகழ்ச்சிகளின் 5-ம்நாள் நிகழ்ச்சிகளை இன்று காலை சேர். கந்தையா வைத்தியநாதன் ஆரம்பித்துவைப்பார்.

# தந்தை ஏசியதற்காக மகள் தற்கொலை செய்தாராம்

மாவிட்டபுரம், வியா.

தந்தை, மகள் ஏன் சமைக்கவில்லை என்று கேட்டு ஏசியதன் காரணமாக மகள் பொலிடோல் குடித்து தற்கொலை செய்த ஓர் பரிதாபச் சம்பவம் ஒன்று பலாலியில் நடைபெற்றுள்ளது.

பலாலியைச் சேர்ந்த புவனம் கிருஷ்ணபிள்ளை என்னும் 15 வயது யுவதி பொலிடோல் குடித்து தற்கொலை செய்ததைத் தொடர்ந்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். ரி. நடராசா மரண விசாரணை நடத்தினர். காங்கேசன் துறைப் பொலிஸைச் சேர்ந்த திரு. தியாகராசா சாட்சிகளை ஆஜர் செய்தார்.

சுப்பர் சிதம்பரப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் நண்பகல் 12-30 மணியளவில் கிணற்றடிக்கு போகும்போது காலம் சென்றவர் முற்றத்தில் நின்று ஒரு கிளாசில் ஏதோ குடித்தார். குடித்ததும் உடனடியாக போய்பார்த்த போது அவருக்கு பக்கத்தில் ஒரு பொலிடோல் போத்தல் காணப்பட்டது. கிளாசில் பொலிடோல் மணம் வீசியது."

சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"சம்பவதினப் நான் 11-30 மணியளவில் வந்த போது சமையல் நடைபெறவில்லை. நான் உடனே மகளைக் கூப்பிட்டு ஏசிவிட்டு நீ சமைத்துச் சாப்பிடு என்று கூறிவிட்டு தோட்டத்திற்கு போய் விட்டேன். சிறிது நேரத்தில் ஒருவர் வந்து மகள் பொலிடோல் குடித்து விட்டதாகக் கூறினார். நான் உடனே அங்கு சென்றேன். மகள் பொலிடோல் குடிப்பதற்கு நான் ஏசியதைத் தவிர வேறு ஒரு காரணமும் இல்லை.

காங்கேசன்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம். வேதாரணியம் பிரேத பரிசோதனை செய்து செய்தார்.

மரண விசாரணை அதிகாரி பொலிடோல் குடித்து தற்கொலை செய்ததாகத் தீர்ப்பளித்தார்.

## என். எம். முக்கு மேயர் தந்தி

யர்ழ்ப்பாணம், வெள்ளி

டாக்டர் என். எம். பெரேரா நிதி மந்திரியாக நியமனம் பெற்றதைக் குறித்து அவருக்கு யாழ்ப்பாணமக்கள் சார்பிலும், மாநகரசபை சார்பிலும் மேயர் திரு. டி. எஸ். துரைராசா நன்றி தெரிவித்து தந்தி ஒன்று அனுப்பி வைத்துள்ளார்.

திருமண அழைப்பு

நிகழும் குரோதி ஞு வைகாசி மீ 30-ம் நாள் (12-6-64) வெள்ளிக்கிழமை காலை 6-05—7-20 மணிக்குமிடையில்வரும் சுபமுகூர்த்தத்தில் திருமணம் நிகழும்.

மணமகன்: திருநிறை செல்வன் சிவசிதம்பரம்
(ஈழநாடு லிமிடெட், யாழ்ப்பாணம்)

மணமகள்: திருநிறை செல்வி தேவநாயகி

மங்கலநாண் பூட்டல்: காலை 6-05—7-20 மணமகளில்லம்.

மணமகன் இல்லத்தில் 14-6-64 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேல் கொண்டாட்டம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்,

மணமகனின் பெற்றோர்
அ. பொன்னம்பலமும்,
(இளைப்பாறிய கிராமாதிகாரி)
பாரியாரும்

மணமகளின் பெற்றோர்
க. விசுவலிங்கமும்
பாரியாரும்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. 492

# விசேஷ பயிற்சி பிரவேச பரீட்சை

## 18-ம் திகதி ஆரம்பமாகும்

கொழும்பு, வியாழன்

சென்ற மாதம் 28-ம் திகதி தொடக்கம் நடைபெறவிருந்த ஆசிரிய விசேஷ பயிற்சிகளுக்கான பிரவேசப் பரீட்சை திரு. நேருவின் மரணம் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்பரீட்சை முன்னர் குறிக்கப்பட்ட நிலையங்களில் முன்னர் குறிக்கப்பட்ட சுட்டு இலக்கங்களுடனே இம்மாதம் 18-ம் திகதி தொடக்கம் 3 நாட்கள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சைக்கான அனுமதிச்சீட்டுப் புதிதாக வழங்கப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆபிரிக்கத் தலைவர் குற்றவாளி

கேப்டவுன், ஜூன் 11

தென்னுபிரிக்காவில் தேசத்துரோகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆபிரிக்க ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. மண்டலேயாவும், மற்றும் 8 தலைவர்களும் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் இந்தியர். 9-வது எதிரியான ஒரு ஐரோப்பியர் குற்றவாளியில்லை என விடுதலை செய்யப்பட்டு, வேறு குற்றத்திற்காக உடனடியாகக் கைதுசெய்யப்பட்டார். இவர்கள் மீதான வழக்கு கடந்த அக்டோபர் முதல் நடைபெற்று வந்தது.

காணவில்லை

எனது மகன் பா. சிவசர்மாவை சென்ற எட்டு நாட்களாக காணவில்லை. வயது: 15, உயரம்: நாலரை அடி, நிறம்: சிவப்பு: வலது காலில் ஆறு விரல்களும், வலது கன்னத்தில் ஒரு மறுவும் உண்டு. கடைசியாக வேட்டியும் வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தார்.

இவரைக் கண்டவர்கள் சீ. பாஸ்கரசர்மா, அல்வாய்மேற்கு அல்வாய் என்ற விலாசத்துக்கு தெரிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ந் திகதி அச்சிட்டுவெளியிடப் பட்டது.